# சிறந்த பரானாக்கானியர்

## ஐம்பது குறிப்பிடத்தக்க வாழ்க்கைகள்

ACM ASIAN CIVILISATIONS MUSEUM

peranakan MUSEUM

**Great Peranakans: Fifty Remarkable Lives**

## சிறந்த பரானாக்கானியர்: ஐம்பது குறிப்பிடத்தக்க வாழ்க்கைகள்

சிங்கப்பூருடைய கதை சந்திப்புகளால் ஏற்படுத்தப்பட்டது. வர்த்தகர்கள், பயணிகள், குடியேறிகள் ஆகியோருக்கிடையிலான சந்திப்புகள், சாம்ராஜ்யங்கள், சமூகங்களுக்கிடையிலான சந்திப்புகள், கலாசாரங்களுக்கிடையிலான சந்திப்புகள். பரானாக்கானியர் பல நூற்றாண்டுகளாக சிங்கப்பூரிலும் இந்த வட்டாரத்திலும் மிக முக்கியமான பங்காற்றியுள்ளனர்.

எல்லைகளைக் கடந்து பல தேசங்களில் பற்றை ஏற்படுத்திக் கொள்வதில் முன்னோடிகள் பரானாக்கானியர். பிரிட்டனுக்கும் சீனாவுக்கும் விசுவாசம் காட்டிய அவர்கள் சிங்கப்பூரிலும் வலுவான ஒரு சமூகத்தை ஏற்படுத்தி விசுவாசம் செலுத்தினர்.

சீனர்களிடையே வர்த்தகத்திலும் அரசாங்கத்திலும் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர் பரானாக்கானியர். கல்வி, சுகாதாரம், சமயம், கலாசாரம் போன்ற சமூக அம்சங்களிலும் அவர்கள் தலைவர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் ஒரே சமயத்தில் பல பொறுப்புகளை வகித்தனர். அவர்கள் சிறப்பாக ஆங்கிலம் பேசினர் (பின்னர் ஆங்கிலக் கல்வி கற்றனர்). இதனால் காலனித்துவ சமூகத்தில் அவர்களால் மத்தியஸ்தர்களாக சேவையாற்ற முடிந்தது. சிங்கப்பூருக்கு அப்பால் அவர்களது கட்டமைப்பு தென்கிழக்காசியா முழுவதும் அதற்கு அப்பாலும் பரவியிருந்தது.

ஐம்பது குறிப்பிடத்தக்க பரானாக்கானியரின் கதைகள் இவை.

## A culture between
## இடைப்பட்ட கலாசாரம்

சிங்கப்பூரில் ஆட்சி செலுத்தத் தொடங்கிய காலத்திலிருந்தே வணிகர்களையும் தொழிலாளர்களையும் கட்டுப்படுத்த சீனத் தலைவர்கள் தேவை என்று பிரிட்டானியர் எண்ணினர். 19ஆம் நூற்றாண்டில் அவர்களின் சொத்து, முக்கியமான கோவில்கள், சங்கங்களில் அவர்கள் வகித்த தலைமைத்துவம் ஆகியவற்றால் சிங்கப்பூரின் சீன சமூகத்தை பரானாக்கான் தலைவர்களே வழிநடத்தினர். வர்த்தக நலன்களைப் பாதுகாத்த அதே வேளையில் அவர்கள் சீனர்களின் உரிமைக்காகவும் போராடினர்.

தென்கிழக்காசியாவில் வாழ்ந்த மேற்கிந்தியத் தாக்கத்துக்குள்ளான சீனர்களைக் குறிக்கும் மலாய்ச் சொல்தான் பரானாக்கான். மலாய் தீபகற்பத்தில் குடியேறிய ஆரம்பகால சீனர்கள் உள்நாட்டுப் பெண்களை மணந்து கொண்டனர். அங்கிருந்துதான் பரானாக்கான் வேர்கள் தோன்றின. பரானாக்கான் ஆண்கள் பாபா என்றும் பெண்கள் நோன்யா என்றும் அழைக்கப்படுகின்றனர். 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் பரானாக்கானியரும் பலதலைமுறைகளாக இந்த வட்டாரத்தில் வாழ்ந்த சீனர்களும் ஸ்ட்ரெய்ட்ஸ் சீனர்கள் என்றழைக்கப்பட்டனர். அந்தச் சொற்றொடர் அவர்களை பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் ஆகியவற்றின் ஸ்ட்ரெய்ட்ஸ் குடியிருப்புகளுடன் இணைத்தது.

20ஆம் நூற்றாண்டில் பல பரானாக்கானியர் சீன மொழியில் சரளமாகப் பேசும் திறமையை இழந்தனர். எனினும் அவர்கள் சீனப் பள்ளிகளையும் சீன செய்தித் தாட்களையும் ஆதரித்தனர். சில பரானாக்கானியர் கிறிஸ்துவ மதத்துக்கு மாறினர். லிம் பூன் கெங் போன்ற வேறு சிலர் கன்ஃபூசியனிசத்தை மீண்டும் கண்டெடுத்தனர். இந்தப் பன்முகத்தன்மை முரண்டபாடானது என்று அப்போது கருதப்பட்டது. ஆனால் நவீன உலகத்தில் அதுபோன்ற வேறுபாடுகள் பழக்கப்பட்டு விட்டன. அரசியல் ரீதியாக இன்றைய சிங்கப்பூரை உருவாக்குவதிலும் பரானாக்கானியர் முக்கியமான பங்காற்றியிருக்கின்றனர்.

## 1819 to 1889: Commerce and community
## 1819 முதல் 1889 வரை: வர்த்தகமும் சமூகமும்

1819ல் பிரிட்டானியர் சிங்கப்பூரில் துறைமுகம் அமைத்தது முதலே பரானாக்கான் சீனர்கள் இங்கு வரத்தொடங்கினர். மலாக்காவிலிருந்து வந்த ஹோக்கியன் மொழி பேசும் பரானாக்கான் சீனர்கள் செல்வந்தர்களாகவும் பலம்பொருந்திய சீன வணிகர்களாகவும் திகழ்ந்தனர். ஆரம்பம் முதலே அறப்பணிகளுக்காக வாரி வழங்கிய சில குடும்பங்கள் சமூகத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். பிரிட்டானியரும் இந்த உண்மையை அறிந்திருந்தனர்.

1854ல் ஹோக்கியன், தியோச்சியூ சமூகங்களுக்கிடையே கலவரம் மூண்டபோது அந்தச் சர்ச்சையைத் தீர்த்துவைக்க பரானாக்கான் தலைவர்களைத்தான் நம்பியிருந்தது பிரிட்டிஷ் அரசாங்கம். அந்த நடவடிக்கைகளால் ஸ்ட்ரெய்ட்ஸ் குடியிருப்புகளின் ஆட்சி மன்றத்திற்கு சீனர்களை நியமித்தது பிரிட்டிஷ் அரசாங்கம்.

சீனக் கிளை மொழிகள், மலாய், ஆங்கிலம் ஆகியவற்றைப் பேசத் தெரிந்ததால் பெரிய பிரிட்டிஷ் வர்த்தக நிறுவனங்களில் நடுவர்களாகப் பணியாற்றினர் பரானாக்கானியர். பின்னர் சொந்த நிறுவனங்களைத் தொடங்கி சீனத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்தனர். கத்தரிக் கம்பையும் மற்ற தானியங்களையும் வளர்த்தனர். கப்பல் நிறுவனங்களை நடத்தினர். பல பரானாக்கான் செல்வந்தர்கள் அரசாங்கத்திடமிருந்து ஓப்பியம் உரிமையை வாங்கினர். அது அபரிமிதமான லாபத்தைத் தந்தது.

**Seah Eu Chin** 佘有进

## சியா இயு சின்

ஷன்டோவுக்கு அருகில், சீனா 1805-1883 சிங்கப்பூர்

*கத்தரிக் கம்பு மன்னனும் தியோச்சியூ சமூகத்தின் தலைவரும்*

சியா இயு சின் 1823ல் ஸ்ட்ரெய்ட்ஸ் பகுதிக்குக் குடிபெயர்ந்தார். பேராக்கின் பரானாக்கான் செல்வந்தரின் மகளை அவர் மணந்து கொண்டார். பிறப்பால் அவர் பரானாக்கான் இல்லை என்றாலும் திருமணம் மூலமும் வர்த்தகத் தொடர்புகள் மூலமும் அவர் ஸ்ட்ரெய்ட்ஸ் சீன சமூகத்தின் ஓர் அங்கமானார். மருந்தாகவும் காய வைக்க உதவும் பொருளாகவும் பயன்பட்ட கத்தரிக் கம்பு விளைச்சல் மூலம் அவர் சொத்துச் சேர்த்தார்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிங்கப்பூரின் ஆகப்பெரிய சீன கிளைமொழிக் குழுவாக இருந்த தியோச்சியூ சமூகத்தின் தலைவராக சியா செயல்பட்டார். நீ ஆன் கொங்சியை அவர் தோற்றுவித்தார். சிங்கப்பூரின் பழமையான சீனக் கோவில்களுள் ஒன்றான வாக் ஹாய் செங் பியோவை அது மேற்பார்வையிட்டது. அவரும் 1854ஆம் ஆண்டு ஹோக்கியன்-தியோச்சியூ கலவரத்தில் சமரசப் பணியாற்றினார்.

தமது சொத்து, மாமனார், சீனாவின் கல்வி கற்ற அரசியல் பின்னணி ஆகியவற்றால் சியா மதிக்கப்பட்டார். 1853ல் பிரிட்டிஷ் குடிமகனான அவர் அமைதித் தூதராக நியமிக்கப்பட்டார். 1850ல் ஆளுநர் டேல்ஹூசியை சிங்கப்பூருக்கு வரவேற்பதில் அவர் தலைமை தாங்கினார்.

**Tan Kim Tian** 陈金锭

## டான் கிம் தியன்

மலாக்கா 1832-1882 சிங்கப்பூர்

*கப்பல் பெருஞ்செல்வர்*

டான் கிம் தியன் 1871ல் டான் கிம் தியன் அண்டு சன் நீராவி நிறுவனத்தை நிறுவினார். சிங்கப்பூரில் கப்பல்களை வாங்கவும் கட்டவும் முற்பட்ட முதல் சீன நிறுவனங்களுள் அதுவும் ஒன்று. அதன் உச்சத்தில் அதனிடம் 11 கப்பல்கள் இருந்தன. டான் குலமரபுக் கோவிலான டான் சி சோங் சு-வின் முதல் தலைவர் டான். நீல் சாலை, கிரெய்க் சாலையின் மூலையில் போட்டான் இல்லம் என்ற கட்டடத்தை அவர் கட்டினார். 1882ல் அவர்

இயற்கை மற்றும் மனித இன ஆராய்ச்சிக்குரிய பல அரும்பொருள்களை ரா◌ஃபிள்ஸ் அரும்பொருளகத்திற்கு வழங்கினார்.

**Tan Kim Ching** 陈金钟
**டான் கிம் சிங்**
சிங்கப்பூர் 1829-1892 சிங்கப்பூர்

*தாய் அரச குடும்பத்தின் நண்பர்*

டான் டோக் செங்கின் மூத்த மகனான டான் கிம் சிங்குக்கு அவரது தந்தையின் சமூக அந்தஸ்து போய்ச் சேர்ந்தாலும் அவர் குண்டர் கும்பலுக்குத் தலைமைப் பொறுப்பேற்றிருந்தார் என்ற வதந்தியும் நிலவியது. தந்தையின் அரிசி வியாபாரத்தை அவர் வியட்நாமுக்கும் தாய்லாந்துக்கும் விரிவு படுத்தினார். 1863ல் சியாம், சிங்கப்பூர் என்ற நீராவிக் கப்பல்களை வாங்கி தஞ்சோங் பகார் டோக் நிறுவனத்தை அவர் தொடங்கினார். 1860ல் ஹோக்கியன் ஹுவே குவான்-ன் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். அவர் நகராண்மை மன்றத்தில் சேர்த்ததோடு அமைதித் தூதுவராகவும் ஆனார்.

தமது வர்த்தக நடவடிக்கைகளின் மூலம் தாய் அரச குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் டான். சிங்கப்பூரின் முதல் தாய்லாந்து உதவித் தூதராக நியமிக்கப்பட்ட அவர், தாய்லாந்து மன்னர் மோங்க்குட்டின் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க ஆங்கில ஆசிரியையைத் தேடிக் கொடுத்தார். தனது தாய்லாந்து உறவைக் கௌரவிக்க நார்த் பிரிட்ஜ் சாலையில் இருந்த தனது வீட்டுக்கு “சியாம் இல்லம்” என்று பெயரிட்டார் டான் கிம் சிங். 1890ல் மன்னர் சுலாலோங்கோர்ன் அந்த வீட்டிற்கு வருகை புரிந்தார்.

**Tan Beng Swee** 陈明水
**டான் பெங் சுவீ**
சிங்கப்பூர் 1828-1884 சிங்கப்பூர்

*டான் குலமரபுக் கோவிலின் நிறுவனர்*

டான் கிம் செங்கின் மூத்த மகனான டான் பெங் சுவீ தன் தந்தையின் மறைவிற்குப் பிறகு கிம் செங் நிறுவனத்தை ஏற்று நடத்தினார். டான் கிம்

செங்குடன் இணைந்து அவர் டான் சி சோங் சு எனப்படும் டான் குலமரபுக் கோவிலைக் கட்ட நிதியுதவி வழங்கினார். தனது ஆங்கில அறிவு போதாது என்று எண்ணியதால் சட்ட மன்றத்திற்கு வழங்கப்பட்ட வாய்ப்பை அவர் நிராகரித்தார். தந்தையைப் போலவே அவர் மலாக்காவுடன் நெருக்கமான உறவைக் கட்டிக்காத்தார். அங்கு செங் ஹூன் டெங் கோவிலின் தலைவராக அவர் இருந்தார்.

**Tan Kim Seng** 陈金声

**டான் கிம் செங்**

மலாக்கா 1805-1864 மலாக்கா

*முன்னணி வணிகர், சிங்கப்பூரின் தண்ணீர் வழங்கீடு ஆதரவாளர்*

மலாக்காவில் தனியார் சீனப் பள்ளியில் கல்வி கற்ற டான் கிம் செங் ஆங்கிலமும் டச்சு மொழியும் சரளமாகப் பேசுவார். சிங்கப்பூரில் வணிகரான அவர் கிம் செங் நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தினார். அந்த நிறுவனம் ஐரோப்பிய வர்த்தக மனைகளுடன் நிறைய வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது.

1850ல் டான் டோக் செங்கின் மறைவிற்குப் பிறகு அவர் அமைதித் தூதுவராக நியமிக்கப்பட்டார். சிங்கப்பூர் ஹோக்கியன் சமூகத்தின் தலைவர் என்ற அவரது அந்தஸ்தை அந்த நியமனம் உறுதிப்படுத்தியது. சீன சமூகத்துக்கு அதிகமான உரிமைகளை அவர் கோரியதோடு சீன சமயச் சடங்குகளை வெளிப்படையாக நடத்த அனுமதிக்கும்படி அரசாங்கத்திற்குக் கோரிக்கை விடுத்தார். காலனித்துவத்துக்கு ஆதரவான சைகைகளை அது வெளிப்படுத்தியது. உதாரணத்திற்கு அவரும் சியா இயு சின்னும் டேல்ஹூசி ஓபலிஸ்க்குக்கு நிதி வழங்கினர்.

**Tan Tock Seng** 陈笃生

**டான் டோக் செங்**

மலாக்கா 1798-1850 சிங்கப்பூர்

*முதல் சமூகத் தலைவர்*

பிரிட்டானியர்கள் சிங்கப்பூரை நிறுவிய அதே 1819ஆம் ஆண்டு சிங்கப்பூருக்கு வந்தவர் டான் டோக் செங். விளைச்சல் பொருள்களை

முதலில் விற்றுவந்த அவர் பின்னர் பிரிட்டனின் ஷா, வைட்ஹெட் நிறுவனத்தின் ஜே. ஹெச். வைட்ஹெட்டுடன் இணைந்து நிலங்களை வாங்கி சொத்துச் சேர்த்தார்.

சிங்கப்பூர் ஹோக்கியன் சமூகத்தின் தலைவராகத் திகழ்ந்தார் டான். அந்தச் சமூகத்தின் குவி மையமாக உருவான தியன் ஹோக் கெங் (தெய்வீக அருள் கோவில்) கோவிலை நிறுவினார். சிங்கப்பூரில் அமைதித் தூதராக நியமிக்கப்பட்ட முதல் ஆசியர் அவரே. வறிய சீனர்களுக்காக சிங்கப்பூரின் முதல் மருத்துவமனையைக் கட்டியவர் அவர் என்று நாம் அவரை இன்று நினைவில் வைத்திருக்கிறோம்.

**Wee Bin 黄敏**

## **வீ பின்**

ஃபூஜியன் மாநிலம் 1823-1868 சிங்கப்பூர்

*சிங்கப்பூரின் ஆரம்பகால கப்பல் நிறுவனத்தின் உரிமையாளர்*

மலாக்காவின் பிரபலமான பரானாக்கான் குடும்பத்தைச் சேர்ந்த கியோங் லியன் கின்னைத் திருமணம் செய்து கொண்டவர் வீ பின். முதலில் டச்சுக் கிழக்கிந்தியாவுடன் வர்த்தகம் நடத்திய வீ பின் நிறுவனம் பின்னர் கப்பல் துறையில் முதலீடு செய்தது. அதன் உச்சக் கட்டத்தில் மலாய் தீபகற்பத்திலும் சீனாவுக்குச் செல்லும் வழியிலும் பயணித்த 20 கப்பல்கள் அதற்குச் சொந்தமாக இருந்தது.

அவரது ஒரே மகனான வீ பூன் டெக் (1850-1888) தொழில் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தொழிலை விரிவுபடுத்தி துடிப்புடன் அறப்பணிகளுக்கு வாரி வழங்கினார். டான் டோக் செங் மருத்துவமனைக்கு அவர் 4,000 வெள்ளி வழங்கினார். வீ பின்னின் கொள்ளுப் பேரனான வீ எங் செங் (1895-1928) ஒரு பிரம்மாதமான வீட்டை 157, நீல் சாலையில் கட்டினார். அது இப்போது பாபா இல்லம் என்றழைக்கப்படுகிறது.

**Gan Eng Seng** 颜永成

## கான் எங் செங்

மலாக்கா 1844-1899 சிங்கப்பூர்

*சீன ஆங்கில இருமொழிப் பள்ளியை நிறுவியவர்*

மலாக்காவில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கான் எங் செங் தனது 16வது வயதில் சிங்கப்பூருக்கு வந்தார். சிங்கப்பூரின் முன்னணி வர்த்தக நிறுவனங்களுள் ஒன்றான கத்ரி நிறுவனத்தில் சேர்ந்து படிப்படியாக உயர்ந்து தலைமை இடையாள் ஆனார். தஞ்சோங் பகார் டோக் நிறுவனத்துக்கு வேலையாட்களைக் குத்தகைக்குக் கொடுத்ததன் மூலமும் நிலம் மூலமும் அவர் சொத்துச் சேர்த்தார்.

கல்விக்குப் பேராதரவு தந்தவர் கான். 1885ல் ஏழைகளுக்காக அவர் ஆங்கிலோ-சீன இலவசப் பள்ளியைத் தொடங்கினார். ஆங்கிலம், சீனம் இரு மொழிகளையும் கற்பிப்பதில் அப்பள்ளி புத்தாக்க வழிகளைக் கையாண்டது. 1923ல் அப்பள்ளி கான் எங் செங் பள்ளி என்று பெயர் மாற்றம் கண்டது.

**Tan Keong Saik** 陈恭锡

## டான் கியோங் செய்க்

மலாக்கா 1850-1909 சிங்கப்பூர்

*கப்பல் உரிமையாளர்*

கப்பல் குமாஸ்தாவாக வேலை செய்ய சிங்கப்பூருக்கு வந்தவர் டான் கியோங் செய்க். 1890ல் டான் ஜியாக் கிம், லீ செங் யான் ஆகியோருடன் இணைந்து முதல் சிங்கப்பூர்-ஐரோப்பிய கப்பல் நிறுவனமான ஸ்ட்ரெய்ட்ஸ் நீராவி நிறுவனத்தைத் தொடங்கினார். கெப்பல் நிறுவனம் 1983ல் அதனை வாங்கியது. தஞ்சோங் பகார் டோக் நிறுவனத்தின் நிர்வாக சபையிலும் டான் இருந்தார்.

1906ல் சீன வர்த்தக தொழில்சபையை உருவாக்க டான் உதவினார். பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாக்க அமைக்கப்பட்ட போ லியுங் குக் என்ற அமைப்பின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்த அவர் பெண்கள் கல்வியையும் ஆதரித்தார். அவரது மகள்களுக்கு சிங்கப்பூர் மெத்தடிஸ்ட்

பெண்கள் பள்ளியை நிறுவிய சோஃபியா பிளாக்மோர் கல்வி கற்பித்தார். கிரேத்தா ஆயர் பகுதியில் அவருக்குப் பல வீடுகள் இருந்தன. 1926ல் கியோங் செய்க் சாலை அவரது நினைவாக பெயரிடப்பட்டது.

**Cheang Hong Lim 章芳琳**

## சியாங் ஹோங் லிம்

சிங்கப்பூர் 1825-1893 சிங்கப்பூர்

*ஓப்பியம் மன்னன்*

ஓப்பியம் மன்னனாகவும் நன்கொடையாளராகவும் திகழ்ந்த சியாங் ஹோங் லிம் பிரச்சினைக்குரிய பெயரை விட்டுச் சென்றிருக்கிறார். தனது தந்தையின் ஓப்பியம் வணிகத்தைப் பெருமளவில் அவர் பெருக்கியதோடு, குண்டர் கும்பல்களின் துணையுடன் தனது சந்தையைத் தற்காத்துக் கொண்டார். காலனித்துவ அரசாங்கம் ஓப்பியம் வணிகத்தை ஊக்குவித்தாலும் அதனை சியாங் மேம்படுத்திய விதம் சட்டத்துக்குப் புறம்பானது.

அவர் ஒரு கருணையற்ற வர்த்தகராக வர்ணிக்கப்படுகிறார். “காலனித்துவ ஆட்சியிலும் சீன அந்தஸ்து முறைகளிலும் அவர் தனது அந்தஸ்தை விலை கொடுத்து வாங்கியதோடு பட்டங்களையும் பணம் கொடுத்து வாங்கினார்.”

பொது மக்களிடம் அவர் தாராளமாக நடந்துகொண்டதால் அவரது விரும்பத்தகாத நடவடிக்கைகள் மீது கவனம் குறைந்தது. ஏழைகளுக்கு உதவ அவர் 100,000 வெள்ளியைச் செலவிட்டதாகச் சொல்லப்படுகிறது. பள்ளிகள், சந்தைகளையும் சிங்கப்பூரின் முதல் பொதுப் பூங்காக்களில் ஒன்றான ஹோங் லிம் பூங்காவையும் அவர் கட்டினார்.

1869ல் சீன அரசப் பட்டத்தை வென்ற முதல் சிங்கப்பூரர் என்ற பெருமையைப் பெற்றார் சியாங். எனினும் அது விலை கொடுத்து வாங்கப்பட்ட பட்டம். ஸ்ட்ரெய்ட்ஸ் பகுதியில் பெரிய அளவில் சிங் பட்டங்களை வாங்கியவரும் அவர்தான்.

**Oei Tiong Ham** 黄仲涵

## ஊய் தியோங் ஹம்

செமாராங், ஜாவா 1866-1924 சிங்கப்பூர்

*சீனி மன்னன்*

கப்பல், ஓப்பிய வர்த்தகம், கரும்பு என மிகப்பெரிய தொழில்களை நடத்தி வந்தார் ஊய் தியோங் ஹம். அவரது நிறுவனமான ஊய் தியோங் ஹம் கன்சர்ன், டச்சுக் கிழக்கிந்தியாவில் முன்னணி சீனி தயாரிக்கும் நிறுவனமாக இருந்தது. ஆசியாவிலேயே சீனருக்குச் சொந்தமான ஆகப்பெரிய நிறுவனமாக அது உருவெடுத்தது.

அவரது சிங்கப்பூர் கப்பல் நிறுவனத்தின் இயக்குநர் லீ ஹூன் லியோங். அவர் டாக்டர் லீ சூ நியோவின் தந்தையும் லீ குவான் இயூவின் தாத்தாவுமாவார். 1920ல் செமாராங்கிலிருந்து சிங்கப்பூருக்கு நிரந்தரமாகக் குடிபெயர்ந்தார் ஊய். டச்சு வரிகளையும் சொத்துரிமைச் சட்டங்களையும் தவிர்ப்பதற்காக அவர் அவ்வாறு செய்திருக்கலாம். ரா:பிள்ஸ் கல்லூரிக்கு 150,000 வெள்ளியையும் டௌ நான் பள்ளிக்கு நிலத்தையும் அவர் நன்கொடையாக வழங்கினார்.

ஊய் தியோங் ஹம் இறந்தபோது அவரின் சொத்து மதிப்பு 140 மில்லியன் வெள்ளி என்று வதந்திகள் பரவின. ஆனால் 50 மில்லியன் வெள்ளி என்பதே சரியான மதிப்பீடாக இருக்கும்.

**Lee Cheng Yan** 李清渊

## லீ செங் யான்

மலாக்கா 1841-1911 சிங்கப்பூர்

*கப்பல் செல்வந்தர்*

1858ல் சிங்கப்பூருக்கு வந்த லீ செங் யான் ஒரு வர்த்தக நிறுவனத்தைத் தொடங்கினார். ஐரோப்பிய நிறுவனங்களுடன் அவர் நெருக்கமாகப் பணியாற்றினார். வர்த்தகத்திற்காகப் பிரிட்டனுக்குப் பயணித்த முதல் ஸ்ட்ரெய்ட்ஸ் சீனர் அவர் என்று நம்பப்படுகிறது. டான் ஜியாக் கிம், டான் கியோங் செய்க் ஆகியோருடன் இணைந்து 1890ல் ஸ்ட்ரெய்ட்ஸ் நீராவி நிறுவனத்தைத் தொடங்கினார் லீ. அதுவே முதல் சிங்கப்பூர்-ஐரோப்பிய கப்பல் நிறுவனமாகும்.

ஹோங் ஜூ சீன இலவசப் பள்ளியை நிறுவியதோடு கான் எங் செங், டௌ நான் பள்ளிகளுக்கு நன்கொடையும் வழங்கிய லீ சீன மொழிக் கல்விக்கு ஆதரவு வழங்கினார். விக்டோரியா நினைவு மண்டபத்திற்கு நிதி திரட்டியதுடன் 1911ல் லண்டனில் ஏழாம் எட்வர்ட் மன்னரின் நினைவு விழாவிலும் கலந்து கொண்டதன் மூலம் பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கு தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினார் லீ. சிங்கப்பூரில் நான்கு ஐரோப்பிய பாணி வீடுகளுக்கு அவர் சொந்தக்காரர். முக்கியமான வீடு கிலினி சாலையில் உள்ள மெஜண்டா காட்டேஜ்.

**Seah Liang Seah** 佘连城

**சியா லியாங் சியா**

சிங்கப்பூர் 1850-1925 சிங்கப்பூர்

*காலனித்துவ அரசியல்வாதி*

தன் தந்தை சியா இயு சின்னுக்குப் பிறகு சக்தி வாய்ந்த தியோச்சியூ சமூகநலச் சங்கமான நீ ஆன் கோங்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றதன் மூலம் தியோச்சியூ சமூகத்தின் தலைவரானார் சியா லியாங் சியா. காலனித்துவ விழாக்களின்போது அவர் சீனச் சமூகத்துக்குத் வழிநடத்துவார். 1887ல் விக்டோரியா அரசியின் பொன்விழா ஆண்டு விழாவில் ஆங்கிலத்தில் உரையாற்றினார் அவர். பிறருடன் சேர்ந்து ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்தை நிறுவிய சியா, சிங்கப்பூர் மருத்துவப் பள்ளிக்கு நிதியுதவியும் வழங்கினார்.

பிரிட்டனின் ஆதரவாளராக இருந்தாலும் காலனித்துவ முறையில் இருந்துகொண்டே சிங்கப்பூரின் நிலைத்தன்மைக்கும் சியா பணியாற்றினார். தனியாகப் புதைக்கப்படுவது, கூட்டுக் குடும்பத்தை ஒன்றாக வைத்திருக்கும் சீனக் கடைவீட்டு வடிவமைப்பு போன்ற பாரம்பரிய சீனப் பழக்கவழக்கங்களை அரசாங்கத் தலையீட்டிலிருந்து அவர் தற்காத்தார்.

**Tan Jiak Kim** 陈若锦

**டான் ஜியாக் கிம்**

சிங்கப்பூர் 1859-1917 சிங்கப்பூர்

*காலனித்துவ பரானாக்கான்*

டான் கிம் செங்கின் பேரனும் டான் பெங் ஸ்வீயின் மகனுமானவர் டான் ஜியாக் கிம். கிம் செங் நிறுவத்தில் சேர்ந்த அவர் ஸ்ட்ரெய்ட்ஸ் சட்ட மன்றத்திலும் மற்ற அரசாங்க நிறுவனங்களிலும் சேவையாற்றியிருக்கிறார். 1900ல் அவர் ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்தை நிறுவி அதன் முதல் தலைவரானார்.

பிரிட்டனின் வலுவான தோழரான அவர் 1911ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டார். அதோடு ஸ்ட்ரெய்ட்ஸ் சீனத் தொண்டூழியர் பிரிவையும் ஏற்பாடு செய்ய அவர் உதவினார். பிரிட்டிஷ் ராணுவ விமானம் ஒன்றிற்காக அவர் 19,200 வெள்ளி நன்கொடை வழங்கினார். அவர் கல்வியின் ஆதரவாளரும் கூட. சீனப் பெண்கள் பள்ளிக்கு நிதியுதவி வழங்கியதோடு சிங்கப்பூரில் மருத்துவப் பள்ளி தொடங்கவும் உதவி செய்தார். “மேற்கத்திய எண்ணங்களைப் புரிந்துகொண்டு அவற்றை எளிதாக கிழக்கத்திய எண்ணங்களுடன் பொருத்தும் அளவுக்கு பரந்த மனப்பான்மை கொண்டவர் டான்,” என்று 1915ல் சி. டபல்யு. டார்பிஷையர் கூறினார்.

**Chan Kim Boon** 曾锦文

## சான் கிம் பூன்

பினாங்கு 1851-1920 சிங்கப்பூர்

*சீனக் கதைகளை மலாயில் மொழிபெயர்த்தவர்*

சீன இலக்கியங்களை மலாயில் மொழிபெயர்த்ததன் மூலம் பண்டைய சீனக் கதைகளை சீனம் வாசிக்க இயலாதவர்களுக்கும் கொண்டு சேர்த்தவர் சான் கிம் பூன். ஆங்கிலம், சீனம், மலாய் மூன்று மொழிகளையும் நன்கு கற்றவர் சான். சிங்கப்பூருக்கு வந்து அவர் கணக்கெழுதுபவராகவும் காசாளராகவும் வேலை செய்தார்.

சீன இலக்கியங்களின் முதல் மலாய் மொழிபெயர்ப்புகள் 1880களில் பட்டேவியாவில் (ஜாகர்த்தா) பதிப்பிக்கப்பட்டன. 1889 வாக்கில் சிங்கப்பூரிலும் அதே மாதிரி படைப்புகள் பதிப்பிக்கப்பட்டன. வரலாற்று விளக்கங்களை சில நேரங்களில் ஆங்கிலத்தில் எழுதி, பெயர்களையும் தலைப்புகளையும் சீனத்தில் எழுதினார் சான். சஞ்சிகைகள், செய்திகள், நகைப்பூட்டும் கதைகள், கடிதங்கள் போன்ற வடிவங்களில் அவரது நூல்கள் வெளிவந்தன. மலாய் தீபகற்பம் முழுவதும் வாசகர்கள்

இருந்தனர். பாபா மலாய் தெரிந்த பரானாக்கானியர் மட்டுமின்றி ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்ட மலாய் மொழியை வாசிப்போரும் அதில் அடங்குவர்.

**Pang Teck Joon** 冯德润

**பாங் டெக் ஜூன்**

மலாக்கா 1844-1928 சிங்கப்பூர்

*பாபா மலாய் மொழிபெயர்ப்பாளர்*

சான் கிம் பூன் வழியில் பாங் டெங் ஜூனும் சீனக் கதைகளை மலாயில் மொழிபெயர்த்தார். சொத்து முதலீடு, கெட்ஸ் நிறுவனத்திலும் பின்னர் ஹென்ரி வாவ் நிறுவனத்திலும் பண்டகசாலை காப்பாளர் பணி ஆகியவற்றின் மூலம் அவர் செல்வந்தரானார்.

சிங்கப்பூரின் 174 தெலுக் ஆயர் ஸ்ட்ரீட்டில் அமைந்திருக்கும் கிம் செக் சை பிரஸ், 1899 தொடங்கி பாங்கின் பல மொழிபெயர்ப்புகளைப் பிரசுரித்தது. இந்தப் பிரசுரங்கள் பாபா மலாய் மொழியின் முக்கியமான ஆரம்பகாலப் பதிவுகளாக உள்ளன. பாபா மலாய் என்பது பெருமளவு ஹோக்கியன் மொழி தாக்கம் உடைய மலாய் மொழியாகும். சிங்கப்பூரிலும் மலாக்காவிலும் பரானாக்கான் சீனர்கள் பேசிய மொழி அது.

**See Ewe Lay** 薛有礼

**சீ ஈவ் லே**

மலாக்கா 1851-1906 சிங்கப்பூர்

*சிங்கப்பூரின் முதல் முக்கிய சீன நாளிதழை நிறுவியவர்*

மலாக்காவின் பழைய பரானாக்கான் குடும்பத்திலிருந்து வந்தவர் சீ ஈவ் லே. சிங்கப்பூருக்கு வந்த அவர் ஹாங்காங், ஷாங்ஹாய் வங்கியின் இடையாளாக வேலை செய்தார். 1881ல் அவர் லாட் பாவ் என்ற சிங்கப்பூரின் முதல் முக்கிய சீன நாளிதழைத் தொடங்கினார். 1934 வரை அது பதிப்பிக்கப்பட்டது. ஆங்கிலம் சார்ந்த பரானாக்கானியர்கள் கூட சீன மொழி, கலாசாரத்தில் அணுக்கமாக ஈடுபட்டிருந்தனர் என்பதை இது காட்டுகிறது.

## 1890 to 1945: Colonial collaboration
## 1890 முதல் 1945: காலனித்துவ கூட்டணி

*Official positions*

*அதிகாரத்துவ பொறுப்புகள்*

சீனர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து முக்கியமான அரசாங்கப் பொறுப்புகளையும் சில சக்தி வாய்ந்த பரானாக்கானியர் வகித்தனர். உதாரணத்திற்கு சட்ட மன்றம், நகரமன்ற ஆணையம், சீன ஆலோசனை மன்றம் ஆகியவற்றில் அவர்கள் உறுப்பியம் பெற்றிருந்தனர். சிறு எண்ணிக்கையிலான ஆண்களுக்கிடையே இந்தப் பொறுப்புகள் சுழற்சி முறையில் வழங்கப்பட்டன. அவர்கள் ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்திலும் தலைவர்களாக இருந்தனர். அந்தச் சங்கம் சீன சமூகத்தை சீரமைப்பதிலும் நவீனமாக்குவதிலும் கவனம் செலுத்தியது. அதற்கு நேர்மாறாக, 1934 ஆம் ஆண்டிலிருந்துதான் அடிமட்ட அரசாங்க வேலைகளை ஏற்க ஆசியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு முன்பு சீனர்கள் அரசாங்கப் பணிகளிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

*Education*

*கல்வி*

பிரிட்டிஷ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயில வழங்கப்பட்ட அரசியார் உபகாரச் சம்பளம், பள்ளியிலேயே தொடர்ந்து இருந்து அதற்காகப் போட்டிபோட பல மாணவர்களை ஊக்குவித்தது. 1899 ஆம் ஆண்டு சிங்கப்பூர் சீனப் பெண்கள் பள்ளிக்கும், 1905 ஆம் ஆண்டு மலாயாவில் ஒரு மருத்துவப் பள்ளிக்கும் அடித்தளம் அமைத்தனர் பரானாக்கானியர்.

*Honours*

*கௌரவங்கள்*

1877 ஆம் ஆண்டு சீன அரசாங்கம் சிங்கப்பூரில் ஒரு தூதரகத்தை அமைத்து அரசப் பட்டங்களை விற்றது. ஸ்ட்ரெய்ட்ஸ் சீனர்கள் மீது சீனா காட்டிய ஆர்வத்தைக் கண்டு அஞ்சிய பிரிட்டிஷ் அரசாங்கமும் பரானாக்கான் சீனர்களுக்குப் பட்டங்கள் வழங்கத் தொடங்கியது. 1936 ஆம் ஆண்டு சோங் ஓங் சியாங்கிற்கு சர் பட்டம் வழங்கப்பட்டது. அந்தப் பட்டத்தைப் பெற்ற முதல் ஸ்ட்ரெய்ட்ஸ் சீனர் அவர். 1952 ஆம் ஆண்டு டான் செங் லோக்கிற்கும் அந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

**Tan Cheng Kee** 陈庆直

## டான் செங் கீ

சிங்கப்பூர் 1882-1939 சிங்கப்பூர்

*திரைப்படத் தொழில் முனைவர்*

டான் கியோங் செய்க்கின் புதல்வரான டான் செங் கீ, சிங்கப்பூரில் கேளிக்கைத் தொழிலின் முன்னோடி. அலம்ப்ரா, மார்ல்போரோ, பல்லேடியம் திரையரங்குகள், லூனா பார்க் ஆகியவற்றுக்கு அவர் சொந்தக்காரராக இருந்தார். அலம்ப்ராவுக்கு புதிய அரங்கு அமைக்கும் பணி 1914ல் தொடங்கி 1916ல் முடிவுற்றது. உள்ளூர் யுரேசிய கட்டட வடிவமைப்பாளர் ஜே.பி. வெஸ்ட்டர்ஹூட்டால் வடிவமைக்கப்பட்ட அதன் உள்பக்கத்தை பிரிட்டிஷ் மன்னர், அரசியின் எண்ணை ஓவியங்கள் அலங்கரித்தன. 1930களில் அந்தத் திரையரங்களை ஷா சகோதரர்கள் வாங்கினர். 1938ல் அது சிங்கப்பூரின் முதல் குளிர்வசதி கொண்ட திரையரங்கமானது.

**Ong Boon Tat** 王文达

## ஓங் பூன் டாட்

சிங்கப்பூர் 1888-1941 சிங்கப்பூர்

*கேளிக்கைப் பூங்கா முன்னோடி*

1923ல் சிங்கப்பூரின் முதல் கேளிக்கைப் பூங்காவான நியூ வோர்ல்டைத் திறந்தார் ஓங் பூன் டாட். குளிர்வசதி கொண்ட மிகப்பெரிய கேபரே நடன அரங்கு, திரைப்படங்கள், குத்துச்சண்டை போட்டிகள், ரோங்கேங், பங்சாவான், கேண்டனீஸ் ஓப்பரா, அழகுப் போட்டிகள் போன்ற பல கவர்ச்சியான அம்சங்களை அது கொண்டிருந்தது. வருகையாளர்கள் டிக்கெட் வாங்கி "டாக்சி நடனமணி"களுடன் நடனமாடலாம். பல இன வருகையாளர்களுக்கு மேற்கத்திய, ஆசிய கேளிக்கை நிகழ்ச்சிகள் படைக்கப்பட்டன.

நியூ வோர்ல்டின் வெற்றியைத் தொடர்ந்து அதே பாணியில் கிரேட் வோர்ல்ட், கே வோர்ல்ட், ஹேப்பி வேலி போன்ற கேளிக்கைப் பூங்காக்களும் உதித்தன. நியூ வோர்ல்ட் 1987ஆம் ஆண்டு மூடப்பட்டது.

**Goh Hood Keng** 吴福庆

## கோ ஹூட் கெங்

சிங்கப்பூர் 1888-1961 சிங்கப்பூர்

*மெத்தடிஸ்ட் போதகர்*

ஸ்ட்ரெய்ட்ஸ் சீன மெத்தடிஸ்ட் தேவாலயத்தின் (தற்போதைய கம்போங் கப்போர் மெத்தடிஸ்ட் தேவாயம்) போதகராக பல ஆண்டுகள் சேவையாற்றினார் பாதிரியார் கோ. நிறைய பெரனாக்கானியர்கள் அந்தத் தேவாலயத்தில் வழிபாடு நடத்தினர். மெத்தடிஸ்ட் பாதிரியாராக நியமிக்கப்பட்ட முதல் ஸ்ட்ரெய்ட்ஸ் சீனர் அவர். பௌத்தர்களான கோவின் பெற்றோர் முதலில் மறுப்புத் தெரிவித்தாலும் பின்னர் அவர் கிறிஸ்துவத்துக்கு மாறியதை ஏற்றுக் கொண்டனர்.

சிங்கப்பூரில் பள்ளிகள் நிறுவுவதில் மெத்தடிஸ்ட் தேவாலயம் முக்கியப் பங்காற்றியுள்ளது. ஆங்கிலோ சீனப் பள்ளி கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்திய, சீனச் சிறுமிகளுக்கான சோஃபியா பிளாக்மோரின் பள்ளி.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் லிம் பூன் கெங், சோங் ஓங் சியாங் உள்ளிட்ட பெரனாக்கான் சீனர்கள் கிறிஸ்துவத்துக்கு மாறினர். சீனப் பிரமுகர்களின் பரவலான போக்கை அது புலப்படுத்தியது. உதாரணத்திற்கு, சன் யாட்-சென், சியாங் கை-ஷெக் போன்றோரும் கிறிஸ்துவர்களே.

**Song Ong Siang** 宋旺相

## சோங் ஓங் சியாங்

சிங்கப்பூர் 1871-1941 சிங்கப்பூர்

*ஸ்ட்ரெய்ட்ஸ் சீனர்களின் வரலாற்றாசிரியர், சிங்கப்பூரின் முதல் சீன 'சர் '*

பிரிட்டனிடமிருந்து சர் பட்டம் பெற்ற முதல் மலாயா சீனர் சோங் ஓங் சியாங். அவர் ஸ்ட்ரெய்ட்சில் வசித்த சீனர்களின் சீர்திருத்தத்துக்காகப் பாடுபட்டார். பெரானாக்கானியர்களிலேயே அவர்தான் பிரிட்டிஷ் ஆட்சியை அதிகம் ஆதரித்தவர்.

அரசியாரின் உபகாரச் சம்பளம் பெற்ற அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். சிங்கப்பூர் திரும்பியதும், அரசியார் உபகாரச் சம்பளம் பெற்றிருந்த மற்றொருவரான ஜேம்ஸ் அய்ட்கன்னுடன் இணைந்து அய்ட்கன் அண்டு ஓங் சியாங் என்ற சட்ட நிறுவனத்தைத் தொடங்கினார்.

1894ல் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட முதல் மலாய் செய்தித்தாளான பிந்தாங் தீமோரை அவர் தொடங்கினார். சிங்கப்பூரில் சீனர்களின் நூறு ஆண்டு வரலாறு என்ற புத்தகத்தை 1923ல் பதிப்பித்தார். லிம் பூன் கெங்குடன் இணைந்து ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கம், ஸ்ட்ரெய்ட்ஸ் சீன சஞ்சிகை போன்றவற்றை உருவாக்க உதவினார். ஸ்ட்ரெய்ட்ஸ் சீன தேவாலயத்தின் (தற்போது பிரின்செப் ஸ்ட்ரீட் பிரஸ்பிட்டேரியன் தேவாலயம்) மூத்தவராக அவர் 41 ஆண்டுகள் சேவையாற்றினார். சீன கிறிஸ்துவ சங்கத்தின் தலைவராகவும் அவர் இருந்தார்.

**Tan Chay Yan** 陈齐贤

## டான் சே யான்

மலாக்கா 1871-1916 மலாக்கா

*ரப்பர் மன்னன்*

1895ல் சிங்கப்பூர் பூமலையிலிருந்து ஒன்பது ரப்பர் மர விதைக் கன்றுகளை வாங்கி (பிரேசிலிலிருந்து வந்தது) மலாக்காவின் புக்கிட் லின்ட்டாங்கில் இருந்த தனது தந்தையின் மரவள்ளிக்கிழங்கு தோட்டத்தில் அவற்றை நட்டு ஒரு தோட்டத்தை உருவாக்கினார் டான் சே யான். டானின் பணி மலாயாவின் ரப்பர் தொழிலைத் தொடங்கி வைத்தது. 1920க்குள் மலாயாவில் 2.2 மில்லியன் ஏக்கர் நிலத்தில் ரப்பர் தோட்டம் அமைந்திருந்தது. அந்த வட்டாரத்தில் பணம் தரும் பயிராக அது இருந்தது. புக்கிட் அசாஹானில் டானுக்குச் சொந்தமான 3000 ஏக்கர் ரப்பர் தோட்டமே உலகின் ஆகப் பெரியது. தோட்டத் தொழிலில் ஈடுபட்டபோது மலேரியா ஏற்பட்டு 1916ல் அவர் காலமானார்.

டான் டோக் செங்கின் பேரனான அவர் வங்கித்துறை, காப்புறுதி போன்றவற்றிலும் ஈடுபட்டிருந்தார். ஈஸ்ட்டர்ன் யுனைட்டட் அஷூரன்ஸ் நிறுவனத்தைத் தொடங்க அவர் உதவினார். மலாக்காவின் நகராண்மை மன்றத்தில் சேவையாற்றியதோடு ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்தின்

மலாக்கா கிளையையும் உருவாக்கினார். அதே நேரத்தில் சுன் யாட்-சென்னின் டோங்மெங்ஹூயிலும் அவர் சேர்ந்தார். தனது தந்தை டான் டெக் குவானின் பெயரில் சிங்கப்பூர் மருத்துவப் பள்ளிக்கான கட்டடம் கட்டுவதற்கு நிதியுதவியும் அவர் வழங்கினார்.

Lim Peng Siang 林秉祥

**லிம் பெங் சியாங்**

சியாமன் 1872-1944 சிங்கப்பூர்

*வங்கியாளர், சீன வர்த்தகத் தொழிற்சபையின் தலைவர்*

லிம் பெங் சியாங்கின் தந்தை லிம் ஹோ புவா அவரது மாமனார் வீ பின்னுக்காக வேலை செய்தவர். லிம் பெங் சியாங், ஹோ ஹோங் நிறுவனக் குழுமத்தைத் தோற்றுவித்தார். அந்த நிறுவனங்கள் கப்பல், அரிசி, சிமெண்ட், எண்ணெய், வங்கி போன்றவற்றில் ஈடுபட்டிருந்தன. சீன வர்த்தகத் தொழிற்சபையின் தலைவராகவும் சீன ஆலோசனை மன்றத்தின் உறுப்பினராகவும் அவர் செயல்பட்டார். முதல் உலகப் போரின்போது அவரும் அவரது மைத்துனர் லீ சூன் குவானும் ஒரு விமானத்தை நன்கொடையாக வழங்கினர்.

Lim Nee Soon 林义顺

**லிம் நீ சூன்**

சிங்கப்பூர் 1879-1936 ஷாங்ஹாய்

*அன்னாசி மன்னர், சீன இயற்கைவாதி*

பாலியில் கப்பிட்டான் என்றழைக்கப்படும் சீனத் தலைவராக இருந்த ஒருவரின் மகளான வி பெக் ஹேயை மணந்தவர் லிம் நீ சூன். 1911ல் அவர் ரப்பர், அன்னாசி நிறுவனத்தைத் தொடங்கினார். அவருக்கு இருந்த மிகப்பெரிய அன்னாசி தோட்டங்களால் அவர் அன்னாசி மன்னன் என்று அழைக்கப்பட்டார்.

சுன் யாட்-சென்னின் நண்பரான லிம் சீன தேசியவாத அரசியலில் தன்னை ஆழமாக ஈடுபடுத்திக் கொண்டார். டியோ எங் ஹோக், டான் சோர் நாம் ஆகியோருடன் இணைந்து அவர் புரட்சிகரமான தோ லாம் ஜிட் போ என்ற பத்திரிகையைத் தொடங்கினார். டெங்மெங்ஹூய் என்ற தேசியவாத

தலைமறைவு அமைப்பின் சிங்கப்பூர் கிளையைத் தொடங்கினார். யீஷூன் நகரம் (நீ சூன் என்ற பெயரின் ஹான்யு பின்யின் வடிவம்) லிம் நீ சூன் என்ற பெயரிலிருந்து வந்ததுதான்.

**Tan Boo Liat** 陈武烈

## டான் பூ லியட்

சிங்கப்பூர் 1875-1934 ஷாங்ஹாய்

*குதிரைப் போட்டி ஆர்வலர்*

டான் டோக் செங்கின் கொள்ளுப் பேரனான டான் பூ லியட், தனது முன்னோர்களைப் போலவே ஹோக்கியன் ஹூவே குவான், தியன் ஹோக் கெங் கோவில்களுக்குத் தலைமை தாங்கினார். அவருக்கு வலுவான அனைத்துலகத் தொடர்புகளும் தாய்லாந்தில் வர்த்தக ஆர்வமும் இருந்தது. சுன் யாட்-செனின் ஆதரவாளரான அவர், சிங்கப்பூரில் குவோமின்டாங் தலைவராகவும் திகழ்ந்தார்.

பெண்டர் சாலையில் கோல்டன் பெல் எனப் பெயரிய டானின் இல்லம் இன்றும் அழியாமலிருக்கும் ஒருசில பரானாக்கான் இல்லங்களில் ஒன்று. அவரது தாத்தாவின் கிம் சிங் என்ற பெயரின் மொழி பெயர்ப்பே கோல்டன் பெல். அந்த வீட்டில் சுன் யாட்-சென் ஒருமுறை தங்கியிருந்தார்.

**Lim Boon Keng** 林文庆

## லிம் பூன் கெங்

பினாங்கு 1869-1957 சிங்கப்பூர்

*அறிஞர், சமூக சேவகர்*

1900 வாக்கில் பெரனாக்கானியர்களின் சின்னமாக லிம் பூன் கெங்கைக் கருதலாம். மலாயிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசிய அவர் மேண்டரினில் சற்று சரளம் குறைந்திருந்தார். பிரிட்டிஷ், சீன, பெரனாக்கான் சமூகங்களில் அவர் சௌகரியமாகப் பழகினார். கிறிஸ்துவ மதத்தையும் கன்ஃபியூஷியனிசத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

பிரிட்டனில் மருத்துவம் பயின்று, சிங்கப்பூரில் அரசியலில் நுழைந்து, வங்கியில் முதலீடு செய்த அவர் சீனாவிலும் ஸ்ட்ரெய்ட்ஸ்

குடியிருப்புகளிலும் கல்விக்காகவும் அரசியல் சீர்திருத்தத்துக்காகவும் குரல் கொடுத்தார். எதிலும் இணக்கத் தீர்வு காண முற்பட்டார் லிம். பிரிட்டிஷ் காலனித்துவ முறையில் அரசியல் மாற்றத்தையும், பாரம்பரியங்களை மரியாதையுடன் நவீனப்படுத்துவதையும் அவர் ஆதரித்தார்.

அரசியார் உபகாரச் சம்பளம் பெற்ற முதல் சீனரான லிம், எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் மருத்துவத்தில் முதல்நிலை ஹானர்ஸ் பட்டம் பெற்றார். ஸ்ட்ரெய்ட்ஸ் சட்ட மன்றத்தில் சேர்ந்து ஸ்ட்ரெய்ட்ஸ் சீன சஞ்சிகையையும் ஸ்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்தையும் உருவாக்க உதவினார்.

**Chew Joo Chiat** 周如切

**சியூ ஜூ சியாட்**

சியாமன் 1857-1926 சிங்கப்பூர்

*காத்தோங் மன்னன்*

சிங்கப்பூருக்கு வந்த பிறகு டான் குவான் நியோ என்ற பரானாக்கான் பெண்ணை மணந்து கொண்டார் சியூ ஜூ சியாட். அவர் கத்தரிக் கம்பு, ஜாதிக்காய், தேங்காய் போன்றவற்றைப் பயிரிட்டு செல்வந்தரானார். சிங்கப்பூரின் காத்தோங்கில் பெரிய அளவு நிலத்தை அவர் வாங்கினார். 1917ல் தனக்குச் சொந்தமான நிலத்தில் பொதுச் சாலை அமைக்க அவர் இணங்கினார். அந்தப் பகுதிதான் இன்று ஜூ சியாட் என்றழைக்கப்படுகிறது.

**Cheong Koon Seng** 钟坤成

**சியோங் கூன் செங்**

சிங்கப்பூர் 1880-1934 சிங்கப்பூர்

*மலாய் மொழி நாடக மேலாளர்*

ஸ்டார் ஓப்பரா கம்பெனி என்ற மலாய் மொழி நிகழ்கலை நிறுவனத்திற்காக தியேட்டர் ராயல் என்ற கட்டடத்தைக் கட்டினார் சியோங் கூன் செங். சிங்கப்பூரில் மலாய் நிகழ்கலைகளில் கவனம் செலுத்திய முதல் முக்கிய திரையரங்கு அது. ஷேக்ஸ்பியர் நாடகங்கள், சீன இலக்கியங்கள், பல கலாசாரங்களின் புனைகதைகள் போன்றவற்றை நடனம், இசை, கண்கட்டி வித்தை, மற்போர், கோமாளிகள் போன்று பலவித கேளிக்கைகள் மூலம் அந்தத் திரையரங்கு படைத்தது.

மலாய் மொழி தெரிந்த அனைவரும் அவற்றைக் கண்டு ரசித்ததாக நிகழ்ச்சி முன்னோட்டங்களும் விளம்பரங்களும் மெய்ப்பிக்கின்றன. திரெங்கானுவின் அரசர் மற்றும் ஆளுநரின் ஆதரவை ஸ்டார் ஓப்பரா பெற்றிருந்தது.

**See Tiong Wah** 薛中华

**சீ தியோங் வா**

சிங்கப்பூர் 1886-1940 சிங்கப்பூர்

*புக்கிட் பிரவுன் இடுகாட்டை நிறுவியவர்*

1877ல் சிங்கப்பூரில் கிளை திறந்த ஹாங்காங் ஷாங்ஹாய் வங்கியில் வேலை செய்தார் சீ தியோங் வா. கிரேட் ஈஸ்ட்டனின் ஆரம்பகால நிறுவனர்களுள் ஒருவரான அவர் வங்கியிலும் காப்பீட்டிலும் துடிப்பாக விளங்கிய பல பரானாக்கானியர்களுள் ஒருவர். பல்வேறு அரசாங்க அலுவலகங்களில் சேவையாற்றிய அவர் சீன வர்த்தகத் தொழிற்சபையின் தலைவரும் கூட. 1922ல் புக்கிட் பிரவுன் இடுகாட்டை ஏற்படுத்திய குழுவில் அவரும் ஓர் உறுப்பினர்.

**Low Kway Song** 刘溪松

**லோ குவே சோங்**

சிங்கப்பூர் 1889-1982 சிங்கப்பூர்

*ஓவியர்*

சொந்தமாகவே வரையக் கற்றுக்கொண்ட லோ குவே சோங், சிங்கப்பூர், மலாயா சமூகங்களின் முக்கியத் தலைவர்களின் உருவப் படங்களை வரைந்தார். சிங்கப்பூர் பயில்முறை ஓவியர் சங்கத்தின் உறுப்பினரான அவர் சிங்கப்பூரிலும் மலாக்காவிலும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்து நடத்தினார். இரண்டாம் எலிசபெத் அரசியார், சன் யாட்-சென், ஆவ் பூன் ஹாவ், மலேசியாவின் முதல் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் போன்றோரின் உருவப்படங்களை அவர் வரைந்தார். 1927ல் ஊய் தியோங் ஹம்மை வரைய அவருக்கு நான்கு இலக்கத் தொகை வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அப்படிப்பட்டத் தொகையைப் பெற்ற முதல் சிங்கப்பூரர்

அவர். ஈஸ்ட்டர்ன் இல்லஸ்ட்ரேட்டட் ரிவியூ சஞ்சிகைக்கு அவர் கேலிச்சித்திரங்களும் வரைந்திருக்கிறார்.

நிகழ்கலைகளிலும் லோ சிறந்து விளங்கினார். மெர்ரிலேட்ஸ் இசை, நாடகக் குழுவை அவர் தோற்றுவித்தார். பெரனாக்கான் நிகழ்கலைக் குழுவான அது 1923ல் உதித்தது.

**Lee Choon Guan** 李浚源

**லீ சூன் குவான்**

சிங்கப்பூர் 1868-1924 சிங்கப்பூர்

*வங்கியாளர்*

லீ செங் யானின் மகனான லீ சூன் குவான் கப்பல்துறை, வங்கித்துறை மூலம் தமது குடும்பத்தின் சொத்தைப் பெருக்கினார். சீன வர்த்தக வங்கியின் தலைவராக லீ இருந்தார். அந்த வங்கி பிறகு ஹோ ஹோங் வங்கியுடன் இணைந்து ஓவர்சீஸ்-சைனிஸ் பேங்கிங் கார்ப்பரேஷன் (ஓசிபிசி) ஆனது.

நகராண்மை ஆணையத்திலும் சீன ஆலோசனை மன்றத்திலும் சேவையாற்றிய அவர் கல்வி தொடர்பானவற்றிற்காக தாராளமாக நிதி வழங்கினார். ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்தில் துடிப்புமிக்க உறுப்பினராக இருந்தார். முதல் உலகப்போரின்போது அவரும் லிம் பெங் சியாங்கும் பிரிட்டினுக்கு ஒரு ராணுவ விமானத்தை நன்கொடையாக வழங்கினர்.

**Mrs Lee Choon Guan (Tan Teck Neo)** 陈德娘

**திருமதி லீ சூன் குவான் (டான் டெக் நியோ)**

சிங்கப்பூர் 1877-1978 சிங்கப்பூர்

*சீன சீமாட்டிகள் சங்கத்தின் முதல் தலைவி*

தனது மகள்கள் முறையாகக் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக பெண்கள் பள்ளி ஒன்றை நிறுவுவதற்காக மெத்தடிஸ்ட் சமய ஊழியர் சோ∴பியா பிளாக்மோருக்கு உதவிய டான் கியோங் செய்க்கின் மகள்தான்

டான் டெக் நியோ. 1900ல் அவர் லீ சூன் குவானை மணந்துகொண்டு அவரது இரண்டாவது மனைவியானார்.

பிரசவத் தாதிகளுக்காக உபகாரச் சம்பளம், சிங்கப்பூர் சீனப் பெண்கள் பள்ளிக்கு நிதி என பெண்களுக்கான அம்சங்களை ஆதரித்தார் திருமதி லீ. சீன சீமாட்டிகள் சங்கத்தைத் (தற்போது சீனப் பெண்கள் சங்கம்) தோற்றுவித்தவர்களுள் அவரும் ஒருவர். அவரே அதன் முதல் தலைவியாகச் செயல்பட்டார். இல்லத் திறன்களை அவர்கள் முதலில் கற்பித்தனர். பின்னர் அறப்பணிகளிலும் ஈடுபட்டனர்.

முதல் உலகப் போரின்போது அவர் இந்தியாவுக்குச் சென்று பிரிட்டிஷ் துருப்புக்களின் நலனுக்கு உதவினார். செஞ்சிலுவைச் சங்கத்திலும் துடிப்பாக இருந்தார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உன்னத உறுப்பினர் பட்டத்தை வென்ற முதல் சீனப் பெண் என்ற பெருமையை அவர் 1918ல் பெற்றார்.

**Koh Hoon Teck** 许云德

## கோ ஹூன் டெக்

சிங்கப்பூர் 1878-1956 சிங்கப்பூர்

*மலாய்க் கவிதை, பாடல்களில் சிறந்தவர்*

பான்ட்டுன் எனப்படும் மலாய் கவிதை வடிவத்திலும் டோன்டாங் சாயாங் எனப்படும் பாட்டுக்குப் பாட்டு வடிவத்திலும் சிறந்து விளங்கினார் கோ ஹூன் டெக். 1904ல் கோர்ன்வால் மின்ஸ்ட்ரல்ஸ் என்ற குழுவில் தனது பணியைத் தொடங்கினார் அவர். திருமணம், விழாக்கள், அறப்பணி நிகழ்ச்சிகள் போன்றவற்றில் ஆங்கிலத்தில் நகைச்சுவைப் பாடல்களைப் பாடிய "இளம் ஸ்ட்ரெய்ட்ஸ் சீன ஆடவர்களை"க் கொண்ட குழு அது. 1910ல் குனோங் சாயாங் சங்கத்தைத் தோற்றுவித்தார் கோ. சிங்கப்பூரில் முதன்முதலில் தோன்றிய பெரனாக்கான் நாடகக் குழுக்களில் ஒன்றான அது இன்றும் செயல்படுகிறது. சங்க உறுப்பினர்களைத் திரட்டி தனது இல்லத்திலேயே ஒத்திகைகளை நடத்தும் அவர் வயலின் வாசிப்பார். தனது இறுதி ஊர்வலத்தில் டோன்டாங் சாயாங் இடம்பெற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பிராஸ் பசா சாலையில் கோ அண்டு கம்பெனி என்ற எழுது பொருள்களை விற்கும் நிறுவனத்தை அவர் தொடங்கினார். சிங்கப்பூரின் அன்றாடக் காட்சிகளைச் சித்திரிக்கும் அஞ்சல் அட்டைகளை அது தயாரித்தது.

## 1946 to 1965: Nation building
## 1946 முதல் 1965 வரை: நாட்டு நிர்மாணம்

*Political activism*

*அரசியல் துடிப்பு*

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சிங்கப்பூரின் பெரும்பாலான தலைவர்கள் ஆங்கிலம் கற்ற பரானாக்கான் சமூகத்திலிருந்தே வந்தனர். சிலர் பிரிட்டானியருடன் நெருக்கமாகப் பணியாற்றி மெதுவாக மாற்றத்தைக் கொண்டுவர முயன்றனர். மற்றவர்கள் சுதந்திர இயக்கங்களால் கவரப்பட்டனர். பெண்கள் உரிமை இயக்கத்தில் பரானாக்கான் பெண்கள் முன்னோடிகளாக இருந்தனர். மாதர் சாசனம் ஏற்றுக்கொள்ளப்படுவதில் அவர்கள் உதவினர்.

*Banks and reconstruction*

*வங்கிகளும் அவற்றின் மறுகட்டமைப்பும்*

போரால் சீரழிந்த சிங்கப்பூர் பொருளாதாரத்தைச் சீரமைப்பதில் பரானாக்கானியர் உதவினர். உதாரணத்திற்கு, பழைய வர்த்தகங்கள் தொடரவும், புதிய வர்த்தகங்கள் தொடங்கவும் உள்ளூர் வங்கிகள் தாராளமாகக் கடன் வழங்கின. 1960களில் வர்த்தக வங்கிகளும் சிங்கப்பூரின் புதிய தொழில்களுக்கு நிதியுதவி வழங்கின.

*Arts and popular culture*

*கலைகளும் பிரபல கலாசாரமும்*

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்ட்ரெய்ட்ஸ் சீன சீர்திருத்த இயக்கம் பரானாக்கானியர்களைப் பொழுதுபோக்கோடும் பணக்கார வாழ்க்கைமுறையோடும் தொடர்பு படுத்தியது. காலனித்துவ காலத்திலிருந்தே இசை, நாடகம், கேளிக்கை ஆகியவற்றில் அந்தச் சமூகம் துடிப்புடன் செயல்பட்டது. போருக்குப் பிறகு இசை, நாடகக் குழுக்கள் பரானாக்கானியரிடையே பிரபலமாகத் திகழ்ந்தன.

**Kwa Geok Choo** 柯玉芝

## குவா கியோக் சூ

சிங்கப்பூர் 1920-2010 சிங்கப்பூர்

*வழக்கறிஞர், பெண்ணுரிமை ஆதரவாளர்*

பெரனாக்கான் குடும்பத்தில் பிறந்த குவா கியோக் சூ, குவா சியூ டீயின் மகளாவார். பிரசித்தி பெற்ற அரசியார் உபகாரச் சம்பளம் பெற்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்ற அவர் முதல் வகுப்பு ஹானர்ஸ் பட்டத்துடன் தேறினார். அத்தகுதியைப் பெற்ற மலாயாவைச் சேர்ந்த முதல் பெண் அவர். 1947 டிசம்பரில் அவர் இங்கிலாந்தில் லீ குவான் இயூவை மணந்து கொண்டார்.

மக்கள் செயல் கட்சியை ஆரம்பித்த உறுப்பினர்களுள் ஒருவரான அவர் கட்சியின் அரசியல் சாசனத்தை எழுதினார். முதல் சந்திப்பில் அவர் கலந்துகொண்டாலும் கட்சியின் உள் உறுப்பினர் குழுவில் அவர் பங்கு பெறவில்லை. 1965ல் தண்ணீர் ஒதுக்கீடு உடன்பாட்டைத் தயாரிப்பதில் அவர் உதவினார். மலேசியாவிலிருந்து பிரிந்தபிறகு சிங்கப்பூருக்குத் தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதை அது உறுதி செய்தது.

பெண்கள் உரிமையை ஆதரித்தவர் குவா. 1961 பெண்கள் சாசனத்தை இயற்றுவதில் அவர் உதவினார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையையும், உடல் கொடுமைக்கு எதிராக பெண்கள் பாதுகாப்பையும், விவாகரத்தானால் நிதி பாதுகாப்பையும் அது உறுதி செய்தது. சம்பளங்களில் பால் பாகுபாடு இருக்கக்கூடாது என்பதையும் அவர் ஆதரித்தார்.

**Mrs Seow Peck Leng (Chua Seng Kim)** 蔡成金

## திருமதி சியாவ் பெக் லெங்

சிங்கப்பூர் 1911-2007 சிங்கப்பூர்

*பெண்கள் உரிமையை ஆதரித்தவர்*

சிங்கப்பூர் மாதர் சங்கத்தின் முதல் தலைவர் திருமதி சியாவ் பெக் லெங். சிங்கப்பூர் சீனப் பெண்கள் பள்ளியிலும் ராஃபிள்ஸ் பெண்கள் பள்ளியிலும் பயின்ற அவர் தெலுக் குராவ் ஆங்கிலப் பள்ளியில் கற்பித்தார். கண்டோன்ட்மண்ட் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தார். சிங்கப்பூர்

ஆசிரியர்கள் சங்கத்தின் முதல் பெண் செயலாளராகவும் துணைத் தலைவராகவும் அவர் இருந்திருக்கிறார். அரசாங்கத்தின் புதிய கல்விச் சேவைத் திட்டத்தில் திருமணமான பெண்களும் ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என அவர் போராடினார்.

சிங்கப்பூரின் முதல் பெண் எதிர்தரப்பு அரசியல்வாதியான திருமதி சியாவ் 1959 முதல் 1963 வரை சிங்கப்பூர் மக்கள் ஒற்றுமைக் கட்சியின் சார்பில் மவுண்ட்பேட்டன் தொகுதியைப் பிரதிநிதித்தார். ஒருவர் பல திருணமங்கள் செய்து கொள்வதற்கு எதிரான சட்டதிருத்ததை முன்மொழிந்தார் அவர். அதன் பலனாக 1961ல் பெண்கள் சாசனம் இயற்றப்பட்டது. கலாசாரங்களின் கலவையான பெரனாக்கான் இனம், புதிய பல இன மலேசியாவுக்கு முன்மாதிரியாகக் கொள்ளப்பட வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார். 1965ல் முழுநேரமாக சமூகப் பணியில் ஈடுபடுவதற்காக அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார் அவர்.

**Sylvia Kho** 许黄仙妹

## சில்வியா கோ

கான்ச்சிங் 1917-2013 சிங்கப்பூர்

*திருமண ஆடை வடிவமைப்பாளர்*

1960கள் முதல் 1980கள் வரை சிங்கப்பூரில் மிகப் பிரபலமான திருமண ஆடை வடிவமைப்பாளராக இருந்தவர் சில்வியா கோ. வட்டாரத்தின் செல்வந்தர்களும் புகழ்பெற்றவர்களும் அவரது வாடிக்கையாளர்கள். பிறந்தபோது வோங் சியன் மோய் என்றழைக்கப்பட்ட அவர் தனது பெரனாக்கான் தாயிடமிருந்து தையல் வேலையைக் கற்றுக் கொண்டார். 9 வயதிலேயே அவரால் ஆடையை வடிவமைத்து, துணியை வெட்டித் தைக்க முடிந்தது. சிங்கப்பூரில் கல்வி கற்று இரண்டாம் உலகப்போர் மூளும்வரை சிங்கப்பூர் பொது மருத்துவமனையில் தாதியாக வேலை செய்தார். அதன்பின் தமது வாழ்க்கைத் துணை கோ ஹோக் சியாவுடன் இணைந்துகொள்ள செமாராங்குக்குச் சென்றார். அங்கு சமையல், கேக் செய்வது, ஆடை தைப்பது போன்றவற்றை அவர் கற்றுக் கொண்டார்.

1946ல் சிங்கப்பூர் திரும்பியபோது வீட்டிலிருந்தவாறே திருமணத் துணி வியாபாரம் ஒன்றைத் தொடங்கினார். தனது முதல் கடையை 1968ல் தங்ளின் கடைத் தொகுதியில் திறந்தார். அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் சென்று, திருமணத் துணிகளையும் அவற்றுக்கான

நாடாக்களையும் வாங்கி வருவார். அவற்றைக் கொண்டு திருமண ஆடைகளைத் தயாரிப்பார்.

**Mrs Tay Lian Teck (Tan Chew Neo)** 陈秋娘

### திருமதி டே லியன் டெக் (டான் சியு நியோ)

சிங்கப்பூர் 1898-1986 சிங்கப்பூர்

*சமூக சேவகி*

சீன சீமாட்டிகள் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர் டான் சியு நியோ. 1939ல் போர் முயற்சிகளுக்கு நிதி திரட்ட ஒரு குழுவை அவர் அமைத்தார். 1948ல் சங்கத்தின் தலைவரானார்.

1922ல் சட்ட மன்ற உறுப்பினரான டே லியன் டெக்கை (1899-1941) அவர் மணந்து கொண்டார். சிங்கப்பூரில் ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது அவரது கணவர் கொல்லப்பட்டார். திருமதி டேயும் அவரது மகளும் ஆஸ்த்திரேலியாவுக்குத் தப்பிச் சென்றனர்.

போருக்குப் பிறகு, அரசியலில் பெண்கள் அதிகம் பங்காற்ற வேண்டும் என்று குரல் கொடுத்தார் திருமதி டே. சீன ஆலோசனை மன்றத்திற்கு நியமிக்கப்பட்ட முதல் இரண்டு பெண்களுள் இவரும் ஒருவர். அமைதித் தூதராகவும் அவர் நியமிக்கப்பட்டார். திரைப்பட முறையீட்டு வாரியத்திலும் அவர்சேவையாற்றினார்.

**Lee Choo Neo** 李珠娘

### லீ சூ நியோ

சிங்கப்பூர் 1895-1947 சிங்கப்பூர்

*சிங்கப்பூரின் முதல் பெண் மருத்துவர்*

லீ சூ நியோ துறவு போன்ற நோன்யா பாரம்பரியத்திலிருந்து விடுபட்டதோடு தன்னுடைய அந்தஸ்தின் உதவியுடன் சமூக சீர்திருத்தத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். சிங்கப்பூரில் ஊய் தியோங் ஹம்மின் கப்பல் நிறுவனத்தை நிர்வகித்த, செமராங்கைச் சேர்ந்த பெரனாக்கானியர் ஒருவரின் மகள்தான் லீ சூ

நியோ. அவரது சகோதரர் லீ சின் கூன், திரு லீ குவான் இயூவின் தந்தையாவார்.

லீ சூ நியோ சிங்கப்பூர் சீனப் பெண்கள் பள்ளியிலும் ராஃபிள்ஸ் பெண்கள் பள்ளியிலும் பயின்றார். 1911ல் அவர் சீனியர் கேம்பிரிட்ஜ் சான்றிதழ் பெற்ற முதல் ஸ்ட்ரெய்ட்ஸ் சீனப் பெண் ஆனார். சிங்கப்பூரின் ஏழாம் எட்வர்ட் மன்னர் மருத்துவப் பள்ளியில் அவர் பயின்றதோடு, 1920ல் இந்தத் தீவின் முதல் சீனப் பெண் மருத்துவரானார்.

மலாய் நாடகத்திலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. 1912ல் முஸ்தாபா என்ற நகைச்சுவை நாடகத்தை எழுதி, ஓவியர் லோ குவே சூவுடன் இணைந்து இயக்கி, அதில் நடித்தும் இருந்தார் லீ. அந்த நாடகம் விக்டோரியா அரங்கில் நடந்தது.

**Maggie Lim** 林陈美仪

## மேகி லிம்

சிங்கப்பூர் 1913-1995 சிங்கப்பூர்

*குடும்பக் கட்டுப்பாட்டு முன்னோடி*

வர்த்தகர் டான் கிவீ சுவீயின் மகளான மேகி லிம், டான் டோக் செங்கின் வழித்தோன்றல். பிரசித்தி பெற்ற அரசியார் உபகாரச் சம்பளத்தைப் பெற்ற முதல் பெண் அவர். லண்டன் பெண்கள் மருத்துவப் பள்ளியில் பயின்ற லிம் ராயல் இலவச மருத்துவமனையில் பணியாற்றினார்.

1940ல் சிங்கப்பூர் திரும்பியபோது லிம் தாய்சேய் நலத்தில் கவனம் செலுத்தும் பொதுச் சுகாதார அதிகாரியானார். குடும்பக் கட்டுப்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் இயக்கம் நடத்தினார். 1949ல் புதிதாகத் தொடங்கப்பட்ட குடும்பத் திட்டச் சங்கத்தில் சேர்ந்து மருத்துவர்களைப் பணியமர்த்தியதோடு கருத்தடை சாதனங்களைப் பரிந்துரைத்து, மருந்தகங்களை நிர்வகித்தார் அவர். 1963ல் சுகாதார அமைச்சின் தாய் சேய் நலப் பிரிவிற்குத் தலைமையேற்ற அவர் குடும்பத் திட்டச் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றார். பின்னர் வெளிநாட்டில் அவர் வேலை செய்தார். ஹவாயி பல்கலைக் கழகத்தின் பொதுச் சுகாதாரப் பள்ளியும் கிழக்கு-மேற்கு நிலையமும் அவற்றுள் அடங்கும்.

**Kwa Siew Tee** 柯守智

**குவா சியூ டீ**

செமாராங், ஜாவா 1888-1977 சிங்கப்பூர்

*வங்கியாளர்*

குவா சியூ டீ பத்து வயதான போது பிழைப்புத் தேடியும் ஆங்கிலம் கற்கவும் சிங்கப்பூருக்கு வந்தார். ராஃபிள்ஸ் கல்வி நிலையத்தில் கற்பித்தபிறகு மலாயாவில் ரப்பர் தோட்டங்களிலும் ஈயச் சுரங்கங்களிலும் வேலை செய்தார். பின்னர் அவர் சான் சி ஓன் என்ற கணக்கு நிறுவனத்தைக் கூட்டாகத் தொடங்கினார். 1932ல் ஓவர்சீ சைனிஸ் பேங்கிங் கார்ப்பரேஷனில் நிர்வாகிய இணைந்த அவர் படிப்படியாக உயர்ந்து பொது நிர்வாகியானார்.

சிங்கப்பூர் நகராண்மை ஆணையம், பொதுச் சேவை ஆணையம் ஆகியவற்றிலும் அவர் சேவையாற்றினார். வீ இயூ நியோவை மணந்தார் குவா. அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தைதான் குவா கியோக் சூ.

**Seow Eu Jin** 萧友仁

**சியாவ் இயு ஜின்**

சிங்கப்பூர் 1920-1993 பெர்த்

*முதல் பாபா கட்டட வடிவமைப்பாளர், பராமரிப்பை வலியுறுத்தியவர்*

எமரல்ட் ஹில்லில் ஒரு பெரிய வீட்டில் வளர்ந்தவர் சியாவ் இயு ஜின். அவரது தாயார் பாலி டான். பாலி டானின் தந்தை டான் பூன் லியாட். இவர்கள் டான் டோக் செங்கின் வழித்தோன்றல். பெர்த்தில் பொறியியலும், மெல்பர்னில் கட்டடக் கலையும் பயின்றார் சியாவ். கோலாலம்பூரில் பூட்டி அண்டு எட்வர்ட்ஸ் நிறுவனத்தில் வேலை தொடங்கிய அவர் 1951ல் ஈ.ஜெ. சியாவ் அசோசியேட்ஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். அது பின்னர் சியாவ், லீ அண்டு ஹியா நிறுவனமானது.

சிங்கப்பூர் கட்டடக் கலைஞர்கள் கழகத்தின் முதல் தலைவரானார் சியாவ். நினைவுச் சின்னங்கள் பாதுகாப்புக் கழகத்தின் துணைத் தலைவராகவும் அவர் இருந்தார். எந்தெந்த நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என பரிந்துரைக்குமாறு சிங்கப்பூரர்களுக்கு அவர் ஊக்கமூட்டினார். 1974ல்

அவர் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தின் கட்டடக் கலைப் பள்ளியின் தலைவரானார். அனைத்துலக நவீனத்துவ பாணியில் பணியாற்றிய சியாவின் நிறுவனம் வீடுகளையும் குடியிருப்பு புளோக்குகளையும் கட்டியது. சியாவ் கட்டிய பிரபலமான கட்டடங்களுள் ஒன்று 1971ல் கட்டிமுடிக்கப்பட்ட ஷாங்ரிலா ஓட்டலின் முதல் பகுதி.

Lim Yew Hock 林有福

## லிம் இயூ ஹோக்

சிங்கப்பூர் 1914-1984 ஜெடா

*சிங்கப்பூரின் இரண்டாம் முதலமைச்சர்*

சிங்கப்பூரின் சுதந்திரத்துக்கு முந்திய ஆண்டுகளில் சிங்கப்பூரின் சக்தி வாய்ந்த அரசியல்வாதிகளுள் ஒருவராகத் திகழ்ந்தார் லிம் இயூ ஹோக். மூன்றாம் தலைமுறை பெரனாக்கானியரான அவர் ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார். டேவிட் மார்ஷல் பதவி துறந்ததையடுத்து நாட்டின் இரண்டாம் முதலமைச்சராக 1956 முதல் 1959 வரை சேவையாற்றினார் அவர்.

முதலமைச்சராக பல வேலை நிறுத்தங்களை எதிர்கொண்ட லிம் தொழிற்சங்கத் தலைவர்கள், செய்தியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைக் கைது செய்ய உத்தரவிட்டார். வலுவான தொழிற்சங்கத் தகுதிகளைக் கொண்டிருந்தாலும், சிங்கப்பூர் சுயாட்சி பெற அவர் உதவியிருந்தாலும், மாணவர்களையும் இடதுசாரிகளையும் அவர் அடக்கிய முறை பெரும்பாலான சீன வாக்காளர்களை அவரிடமிருந்து அந்நியப் படுத்தியது. அதிகாரம் மிக்க பிரிட்டிஷ் ஆட்சியோடு தொடர்புபடுத்தப்பட்ட லிம்மை 1959ல் மக்கள் செயல் கட்சி தோற்கடித்தது.

எதிர்கட்சித் தலைவராகச் செயல்பட்டாலும் சிங்கப்பூர் அரசியலில் லிம் ஆர்வம் இழந்தார். 1965ல் சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்ததும் அவர் மலேசியக் குடியுரிமையைத் தேர்ந்தெடுத்தார். “பிரிந்த பெற்றோரின் பிள்ளை” என தம்மை வர்ணித்துக்கொண்ட லிம் “மலேசியாவும் சிங்கப்பூரும் ஒன்றிணையும்போது நான் மீண்டும் மகிழ்ச்சியடைவேன்” என்று கூறினார்.

**Tan Cheng Lock** 陈祯禄

## டான் செங் லோக்

மலாக்கா 1883-1960 மலாக்கா

*மலாயா அரசதந்திரி*

ஸ்ட்ரெய்ட்ஸ் குடியிருப்புகளின் முதல் உண்மையான சீன அரசியல்வாதி டான் செங் லோக். 1923ல் சட்ட மன்றத்துக்கு நியமிக்கப்பட்ட அவர் அரசாங்கச் சேவை, போலிஸ், குடிநுழைவுக் கொள்கை ஆகியவற்றில் சீனர்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவர வாதாடினார். இனத்தால் பிரிக்கப்படாத, “மத்திய அரசாங்கத்தையும் நாடாளுமன்றத்தையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட, சுயாட்சியான பிரிட்டிஷ் மலாயா” உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மலேய சீனச் சங்கத்தை அவர் உருவாக்கினார். அது அம்னோ எனப்படும் ஐக்கிய மலாய் தேசிய அமைப்புடன் கூட்டு ஏற்படுத்திக்கொண்டது. 1955ல் கூட்டுறவுக் கட்சி முதல் மலேசியத் தேர்தலில் வெற்றிபெற்றதோடு சிங்கப்பூர் பொதுத் தேர்தலில் மூன்று இடங்களையும் வென்றது. சிங்கப்பூரில் மக்கள் செயல் கட்சியின் முதல் கூட்டத்தில் டான் கலந்து கொண்டார். சிங்கப்பூரும் மலாயாவும் இணைய வேண்டும் என அவர் தொடர்ந்து நம்பிக்கை தெரிவித்தார்.

1950களின் நடுப்பகுதியில் பொது வாழ்க்கையிலிருந்து ஓய்வு எடுத்துக்கொண்ட டான், மலேய நாடாளுமன்றத்திற்குள்ளும் நுழையவில்லை. அவரது மகன் டான் சியூ சின் மலாயாவின் வர்த்தக அமைச்சராகவும் பின்னர் நிதியமைச்சராகவும் பொறுப்பேற்றார்.

**Tan Chin Tuan** 陈振传

## டான் சின் துவான்

சிங்கப்பூர் 1908-2005 சிங்கப்பூர்

*திரு ஓசிபிசி*

வங்கியாளரான டான் செங் சியோங்கின் மகன் டான் சின் துவான். இங்கிலாந்தில் சட்டம் பயில வேண்டும் என்ற அவரது திட்டம் தந்தையின் மரணத்தால் பாதியிலேயே நின்றுபோனது. சைனிஸ் கமர்ஷியல்

வங்கியில் இளம் குமாஸ்தாவா வேலைக்குச் சேர்ந்த அவர் 34 வயதிலேயே ஓசிபிசி வங்கியின் நிர்வாக இயக்குநர் பதவிக்கு உயர்ந்தார். 1966ல் அதன் தலைவரானார். பொருளியல் நிலைத்தன்மையற்ற காலங்களில் பெரிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யும் ஓசிபிசி வங்கியின் தொலைநோக்கு செயல்திட்டத்திற்கு டானே பொறுப்பு.

படிப்படியான சுயாட்சிக்கு பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கத்துடன் சேர்ந்து பணியாற்றினார் டான். 1951ல் சட்ட மன்றத்தின் உதவித் தலைவரானார் அவர். காலனித்துவ ஆட்சியில் ஓர் ஆசியர் வகித்த ஆக உயரிய அரசியல் பதவி அது.

**Lim Kim San** 林金山

## லிம் கிம் சான்

சிங்கப்பூர் 1916-2006 சிங்கப்பூர்

*திரு வீவக*

பொது வீடமைப்பை விரைவாக உருவாக்க 1960ல் தொடங்கப்பட்ட சிங்கப்பூர் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் (வீவக) முதல் தலைவர் லிம் கிம் சான். ஆங்கிலோ சீனப் பள்ளியிலும் ரா·ஃபிள்ஸ் கல்லூரியிலும் பயின்றவர் அவர். மதிநுட்பம் வாய்ந்த வர்த்தகரான அவர் தனது குடும்பத்தின் ரப்பர், விளைபொருள்கள், உப்பு, எரிவாயு தொழில்களை நடத்தியதோடு அவரது மாமனாரின் ஐவ்வரிசி, வட்டிக்கடை தொழில்களையும் எடுத்து நடத்தினார். 34வது வயதிலேயே அவர் முதல் மில்லியன் வெள்ளியைச் சம்பாதித்து விட்டார்.

1960 முதல் 1963 வரை அவர் வீவகவின் தலைவராக இருந்தார். அவரது தலைமைத்துவத்தின்கீழ் வீவக 26,000க்கும் அதிகமான வீடுகளைக் கட்டியது. சிங்கப்பூர் முன்னேற்ற ட்ரஸ்ட் 32 ஆண்டுகளில் கட்டிய வீடுகளின் எண்ணிக்கையைவிட அது அதிகம்.

1962ல் முதன்முதலாக ஆர்டர் ஆ·ஃப் தெமாசெக் விருது லிம்முக்கு வழங்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு அவர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய வளர்ச்சி, நிதி, தற்காப்பு, கல்வி, சுற்றுப்புறம் என பல்வேறு அமைச்சுகளில் பணியாற்றினார். 1981ல் பதவி ஓய்வு பெற்றார்.

**Toh Chin Chye** 杜进才

## டோ சின் சை

பேராக் 1921-2012 சிங்கப்பூர்

*மக்கள் செயல் கட்சியின் முதல் தலைவர்*

லண்டனில் உடற்கூறியலில் முனைவர் பட்டம் பெற்றவர் டோ சின் சை. 1953ல் சிங்கப்பூர் திரும்பியவுடன் மலாயா பல்கலைக் கழகத்தில் கற்பித்த டோ பின்னர் அரசியலில் நுழைந்தார்.

மக்கள் செயல் கட்சியை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைத்த டோ 27 ஆண்டுகளுக்கு அதன் தலைவராக இருந்தார். 1959 பொதுத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு அவரது வாக்காலேயே சிங்கப்பூரின் பிரதமராக லீ குவான் இயூ தேர்ந்தெடுக்கப்பட்டார். சிங்கப்பூரின் முதல் துணைப் பிரதமர் என்ற முறையில் மலேசியாவுடனான இணைப்பை வலுவாக ஆதரித்தார் டோ. பின்னர் இரு நாடுகளும் பிரிந்தபோது லீக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

1981ல் அமைச்சரவையை விட்டு விலகிய பிறகு அவர் வெளிப்படையாகப் பேச ஆரம்பித்தார். கூடுதல் அரசியல் சகிப்புத்தன்மைக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் அவர் வாதாடினார். 1988ல் அவர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார். “வலுவான நம்பிக்கைகளுடையவர்கள் ஒன்றாக வரும்போது கருத்து மோதல்கள் ஏற்படுவது இயற்கையே. ஆனால் எங்கள் மோதல்கள் கொள்கைகளின் அடிப்படையிலானவை. உயர்நோக்கிலான கருத்துவேறுபாடுகளாகவே அவை இருந்தன,” என்று டோவைப் பற்றி லீ குவான் இயூ கூறியிருக்கிறார்.

**Goh Keng Swee** 吴庆瑞

## கோ கெங் சுவீ

மலாக்கா 1918-2010 சிங்கப்பூர்

*சிங்கப்பூர் பொதுக் கொள்கையின் சிற்பி*

லண்டன் பொருளியல் பள்ளியில் முனைவர் பட்டம் படித்துக் கொண்டிருந்தபோது, ஸ்ட்ரெய்ட்ஸ் பகுதியிலிருந்து வந்த மாணவர்களுடன் சேர்ந்து மலேயன் ஃபோரம் என்ற குழுவை ஆரம்பித்தார் கோ கெங் சுவீ.

லீ குவான் இயூ, டோ சின் சை ஆகியோருடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டார்.

1956ல் மக்கள் செயல் கட்சியில் இணைந்த கோ 1959ல் நாடாளுமன்றத்தில் இணைந்தார். காலனித்துவ பொதுச் சேவையில் இருந்தபோது பல சிங்கப்பூரர்களின் வறுமையையும் அவர்கள் வாழ்ந்த மோசமான சூழ்நிலையையும் நன்கு அறிந்து கொண்டார் கோ. 1959ல் நிதியமைச்சராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டது சிங்கப்பூரர்களின் நிலையை மேம்படுத்த சரியான தளமாக அமைந்தது. சிங்கப்பூரின் நீண்ட காலப் பொருளியல் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு அவர் நாட்டு வளர்ச்சித் திட்டத்தை வரைந்தார்.

1959ன் நடுப்பகுதியிலிருந்து சுமார் 25 ஆண்டுகள் நிதி, தற்காப்பு, கல்வி, துணைப் பிரதமர் பொறுப்பு என தான் கால்பதித்த அத்தனை துறைகளிலும் முத்திரை பதித்தார் கோ. “என்னுடைய அமைச்சரவை சகாக்களிலேயே கோ கெங் சுவீதான் சிங்கப்பூரின் வளப்பத்திற்கு மிகப் பெரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார்,” என லீ குவான் இயூ கூறியிருக்கிறார்.

**William Tan Wee Liam** 陈威廉

## வில்லியம் டான் வீ லியம்

சிங்கப்பூர் 1928-2009 சிங்கப்பூர்

*நிகழ்கலை முன்னோடி*

நடிப்பு, நாடக எழுத்து, இயக்கம், தயாரிப்பு ஆகியவற்றில் ஒரு முன்னோடி பெரனாக்கானியர் வில்லியம் டான் வீ லியம். 1950களிலும் 1960களிலும் பெரனாக்கான் நாடகங்களில் (வாயாங் பெரனாக்கான்) அவர் நடித்த கதாபாத்திரங்கள் புகழ்பெற்றவை. பெண் வேடங்களிலும் அவர் நடித்திருக்கிறார். சத்து டாரா, ஜன்டா காயா, டிடாக் பெர்டோசா, ஆயர் மாத்தா இபு போன்ற புகழ்பெற்ற நாடகங்களில் அவர் நடித்திருக்கிறார்.

டோன்டாங் சாயாங் எனப்படும் பாரம்பரிய மலாய் சொற்கலையில் அவர் சிறந்து விளங்கினார். பாண்ட்டுன் (பாரம்பரிய நான்கு வரி பாடல்) எனப்படும் கலையைப் பின்பற்றி மலாய், மேற்கத்திய இசைக் கருவிகள் கலந்த கலை அது. பாண்ட்டுன் பாடுவதில் அவருக்கு கிவீ பெங் கிவீ பயிற்சியளித்தார். உடனுக்குடன் பாடுவதில் அவர் வல்லவராகத் திகழ்ந்தார். டோன்டாங் சாயாங்கைப் பாதுகாக்கும் நோக்கத்துடன்

பெரனாக்கானியர்களால் உருவாக்கப்பட்ட குனோங் சாயாங் சங்கத்தில் அவர் முக்கிய உறுப்பினராக இருந்தார். 1910ல் தொடங்கி இன்றும் செயல்படும் அச்சங்கம் முதலில் ஆண்களுக்கான சமூக மன்றமாக மட்டுமே இருந்தது. 1980களின் பிற்பகுதியில் பெண்களும் அனுமதிக்கப்பட்டனர்.

**Goh Soon Tioe** 吴顺畴

**கோ சூன் தியோ**

பாடாங், சுமத்ரா 1911-1982 சிங்கப்பூர்

*இசைக்கலைஞர்*

சிங்கப்பூர் பாரம்பரிய இசையின் முன்னோடி கோ சூன் தியோ. 13 வயதில் அவர் சிங்கப்பூருக்கு வந்தார். 15வது வயதில்தான் அவர் வயலின் கற்கத் தொடங்கினார். ஆனால் நிறைய திறமைகள் கொண்டிருந்த அவர் 1932ல் ஸ்விட்சர்லாந்துக்குச் சென்று Conservatoire de musique de Genève-ல் இணைந்தார். பிரசல்சில் ராயல் மியூசிக் அகாடெமியின் ஆல்ஃபிரட் மார்க்கோட்டின் கீழ் அவர் பயிற்சி பெற்றார்.

1954ல் கோ சூன் தியோ மீட்டும் இசைக்குழுவை அவர் தொடங்கினார். 1950களிலும் 60களிலும் அவர் இசைக் கச்சேரிகளை நடத்தி அனைத்துலகப் புகழ்பெற்ற இசைக் கலைஞர்களை சிங்கப்பூருக்குக் கொண்டு வந்தார். வயலின் இசைக்கும் லினட் சியா, லீ பான் ஹோன், பியானோ இசைக்கும் சியாவ் யிட் கின், மெல்வின் டான், நடத்துநர் சூ ஹோய் போன்ற சிங்கப்பூரின் இசைப் பிரபலங்களுக்கு அவர் கற்பித்தார். சிங்கப்பூரின் இசை வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பைக் கௌரவிக்கும் பொருட்டு அவருக்கு 1963ல் மெச்சத்தக்க சேவை விருது வழங்கப்பட்டது.

**Lee Kuan Yew** 李光耀

**லீ குவான் இயூ**

சிங்கப்பூர் 1923-2015 சிங்கப்பூர்

*முதல் பிரதமர்*

லீ சின் கூன், சுவா ஜிம் நியோவின் மூத்த மகன் லீ குவான் இயூ. அவரது தாய்வழி தாத்தவான சுவா கிம் டெங் பெரனாக்கான் ஹோக்கியன்

பிரிவைச் சேர்ந்தவர். ராஃபிள்ஸ் கல்வி நிலையத்தில் பயின்ற லீ கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். லண்டனில் இருந்தபோது அவர் மலேயன் ஃபோரமில் பங்கு பெற்றார். அவரது அரசியல் ஈடுபாடு அவரையும் கோ கெங் சுவீயையும் சிறப்புப் பிரிவின் பார்வைக்குக் கீழ் கொண்டு வந்தது.

சிங்கப்பூர் திரும்பியதும் லீயும் அவரது மனைவி குவா கியோக் சூவும் லேகோக் அண்டு ஓங் சட்ட நிறுவனத்தில் சேர்ந்தனர். பின்னர் லீ அண்டு லீ என்ற தங்கள் சொந்த நிறுவனத்தைத் தொடங்கினர். சில பிரபலமான தொழிற்சங்க வழக்குகளை லீ ஏற்று நடத்தினார். தொழிற்சங்கங்கள், குலமரபுச் சங்கங்கள், மாணவர்கள் போன்றோருக்கு அவர் ஆலோசகராகச் செயல்பட்டார். வேலை செய்யும் சீனர்களைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள அது அவருக்கு உதவியது. ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கும் நோக்கத்தோடு ஸ்ட்ரெய்ட்ஸ் சீன பிரிட்டிஷ் சங்கத்தில் இணைந்தார் லீ. அது தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1954ல் மக்கள் செயல் கட்சியை உருவாக்குவதில் தலைமை தாங்கினார் லீ. அக்கட்சியின் முதல் தலைமைச் செயலாளராகவும் அவர் ஆனார்.

1955 சட்டமன்றத் தேர்தலில் தஞ்சோங் பகார் தொகுதியை வென்றார் லீ. 1959ல் 51 தொகுதிகளில் 43ஐக் கைப்பற்றி அபார வெற்றி பெற்றது மக்கள் செயல் கட்சி. சிங்கப்பூரின் முதல் பிரதமரான லீ 1990 வரை அந்தப் பதவியில் நீடித்தார்.

1961ல் மலாயாவுடன் இணைவதற்காகப் போராடினார் லீ. அதனால் கட்சியில் பிளவு ஏற்பட்டு பாரிசான் சோஷலிஸ் என்ற கட்சி உருவானது. 1963ல் மலேசியா உருவானபோது புதிய மலேசிய நாடாளுமன்றத்தில் லீ உட்பட 15 சிங்கப்பூர் பிரதிநிதிகள் இடம்பெற்றனர். இரு தரப்பு உறவும் விரைவில் மோசமடைந்தது. 1965ல் மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்த பிறகுதான் சமூகப் பதற்றமும் அரசியல் மனக்கசப்பும் தணிந்தது.

சிங்கப்பூருக்கு இனங்களைக் கடந்த அடையாளம் தேவை என்பதையே தனது முக்கியக் கவலையாகக் கொண்டிருந்ததால் லீ தன்னை ஒரு பெரனாக்கானியர் என்று வெளிப்படையாகக் கூறிக் கொண்டதில்லை. இருப்பினும் அவரது மனைவி “குவான் இயூவும் நானும் பெரனாக்கான் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். எங்கள் குடும்பங்கள் சீனமும் கிளை மொழியும் பேசியதில்லை,” என்றார்.